பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 61331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 15] சென்னை: பங்குனி 26 (8-4—58) திங்கள் ✯ வெளியூர்: பங்குனி 27 (9-4—68) செவ்வாய் [இதழ்: 247

குடிசைகள் பிரச்சினைக்குத் தீர்வு

ஜி.டி. நாயுடு அறிவிப்பு

சென்னை, ஏப். 8—

"குடிசைகள் பிரச்சினையை இல்லாது ஒழிக்கத் தமிழ்நாட்டில் மலிவு விலை விடுகள் ஓர் இலட்சம் கட்டித் தருவேன்.

"தமிழகத்தில் மட்டுமின்றி, நாடெங் கணும் மலிவு விடுகள் கட்டித் தரவும் நான் தயாராக இருக்கிறேன்.

"சிவப்பு நாடாவும் அரசாங்கக் குறுக் கீடுகளுமே என்னை இவ்வாறு செய்ய விடாமல் தடுக்கின்றன."

—பிறந்தநாள் விழாவில்

பாடுபடும் பாட்டாளி மக்கள் பலன் காணுவதெப்போது?

உடலுழைப்புடன் விஞ்ஞானமும் பிணைக்கப்பட வேண்டும்

ஜி. டி. நாயுடு போன்றோரின் கண்டுபிடிப்புகளைச் சமுதாயம் பயன்படுத்த வேண்டும்

பாராட்டு விழாவில் முதலமைச்சர் அண்ணா வேண்டுகோள்

சென்னை, ஏப். 8—

"இந்த நாட்டு மக்கள் கடுமையாக உழைக்கிறார்கள்! காளை மாடு இழுக்கவேண்டிய கட்டை வண்டியை, பின்னால் ஒருவர் முட்டுக் கொடுத்துத் தள்ள — முன்னால் ஒருவர் இழுத்துச் செல்வதைப் பார்க்கிறோம்; உச்சி வெயி லிலே, காலணி இல்லாமல் கோணியைச் சுற்றிக்கொண்டு வண்டி இழுப்ப தைக் காண்கிறோம்!

"ஓங்கி உயர்ந்துள்ள மலையில் வெடிகளை வைத்துக் கற்களைப் பிளந்து கொண்டுவந்து பாதை அமைக்கிற பாட்டாளியைப் பார்க்கிறோம்!

"உடல் உழைப்பை அளிக்க நம்முடைய நாட்டு மக்கள் தயக்கம் காட்ட வில்லை! 'உழைப்பினால் ஏற்படும் பலன் முழுவதும் தமக்கு வருகிறதா' என்ற கணக்கைக்கூடப் பார்க்காமல், 'நாட்டுக்காக — நம்முடைய மக்க ளுக்காகப் பாடுபடுகிறோம்' என்ற எண்ணத்தில் கோடிக்கணக்கான மக் கள் இந்த நாட்டில் பாடுபடுகிறார்கள்!

"அவர்கள் இன்னமும் முழு வாழ்வு பெறவில்லை — புது வாழ்வு பெற வில்லை; அந்தப் புது வாழ்வும், முழு வாழ்வும் பெறுவதானால், உழல் உழைப்போடு விஞ்ஞானமும் பிணைக்கப்பட வேண்டும்; அதற்குப் பல்கலைக் கழகமும், விஞ்ஞானக்கூடமும் மட்டும் போதுமான காரியத்தைச் சாதித்து விட முடியாது.

"விஞ்ஞானக்கூடம் வேண்டாமென்று நான் சொல்லவில்லை; விஞ் ஞானக்கூடத்தை மட்டும் நம்பியிருக்காமல், ஜி.டி. நாயுடு போன்றவர்கள் கண்டுபிடித்தவைகளைச் சமுதாயம் பயன்படுத்தி, அதன்மூலம் பெரும் பயன் பெற முன்வர வேண்டும்."

—இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழக மக்கள் சார்பில் நேற்று நேரு விளையாட்டரங் கில் நடைபெற்ற ஜி.டி. நாயுடு அவர்கள் பிறந்த நாள் விழாவில் உரையாற்றுகையில் சுட்டிக் காட்டிக் கேட்டுக்கொண்டார். அவர் ஆற்றிய உரையின் சுருக்கமாவது:—

எதிர்காலச் சந்ததியினருக்குக் கருவூலம் அமைகிறது!

"இன்று இந்த விழாவில் ஜி. டி. நாயுடு அவர்களைப் பாராட்டி அவருக்கு மரியாதை செலுத்து வது விழாவுக்குரிய சிறப்பாகும்.

விஞ்ஞான மேதை — தொழில் வித்தகர் — கொடைவள்ளல் ஜி. டி. நாயுடு அவர்களுக்குச் சென்னை மாநகராட்சி தன்னு டைய பாராட்டுதலையும் வாழ்த் துக்களையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டதால், விழாவின் சிறப்பு மேலும் உயரு கிறது.

நண்பர் ஜி. டி. நாயுடு அவர் கள், அளவிடற்கரிய பல நல்ல காரியங்கள் செய்து இருக் கிறார்; ஆனால், அவைகளால் சமுதாயம் முழுவதும் இன்று பயனடையாவிட்டாலும், வருங் காலச் சந்ததியினருக்கு அவைகள் கருவூலமாக அமைய இருக்கின்றன!

இயல்பான அறிவால் பாராட்டு பெறுகிறார்!

நண்பர் ஜி. டி. நாயுடு அவர்கள், விஞ்ஞானக்கூடங்களிலோ, பல் கலைக் கழகங்களிலோ படித்துப் பட்டங்களோ, பயிற்சியோ பெற்றவர் அல்லர்! தம்முடைய இயல்பான அறிவைக் கொண்டு எதையும் சுறுசுறுப்பாக ஆராய்ந்து பார்க்கும் திறனால், தம்மை வளர்த்துக்கொண்டார்!

பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களும், தொழில் துறையில் பயிற்சி பெற்றவர் களும் அவரைப் பாராட்டியிருக் கிறார்கள். இந்தியா முழுவதும் மட்டுமல்ல—வெளிநாடுகளிலும் பாராட்டியிருக்கிறார்கள்!

"எப்பொருள் எத்தன்மைத்தா யினும்—அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு!"

என்ற வள்ளுவரின் குறளுக் கொப்ப, எந்தப் பொருளாக இருந்தாலும், அந்தப் பொரு ளின் உண்மையான தோற்றம் என்ன என்பதை ஆராய்ந்து— அதற்கொப்ப ஒழுகிவந்த கார ணத்தாலே, அவருக்கு நாடு நன்றி காட்டுகிறது!

மக்கள் சக்தியுடன் விஞ்ஞான சக்தியும் பிணைக்கப்படுவது அவசியம்

தொழில் துறையில் நாம் வேக மாக முன்னேறவேண்டியிருக் கிறது!

மக்கள் தொகை வளர்ந்துள்ள நாடு இந்தியா என்பதாலே, தொழில் துறையில் விஞ்ஞா னம் இணைக்கப்பட்டாலன்றி, இந்த நாட்டு மக்களுக்குச் சுக வாழ்வு அளிப்பதென்பது எந்த அரசாலும் முடியாது!

எந்த அரசு ஆளவந்தாலும், ஏழை எளிய பாட்டாளி மக் களுக்கு நல்வாழ்வு தர வேண்டுமானால், இயற்கைச் செல்வத்தைப் பயன்படுத்த மக்கள் சக்தியோடு விஞ்ஞான சக்தியும் பிணைக்கப்படுவது அவசியமாகும்!

பளபளப்பைக் கண்டு மயங்குவோர் நிலை அது

நம்மிலே சிலருக்குப் பொன் னாடை போர்த்தினால், 'என்ன விலை பெறும்' என்று பார்ப் போம்! நம்முடைய பெரியாராக இருந்தால், 'ஏன் துணியாகக் கொடுத்தார்கள்? நாணயமாகக் கொடுத்திருக்கக் கூடாதா?' என்று கருதுவார்!

நாட்டிலே பெரும்பாலோர், பள பளப்பைக் கண்டு மயக்கம் கொள்கிறார்கள்! படாடோபத் தைக் கண்டு—பெரிய மோட் டார் காரைக் கண்டு மயங்கு கிறார்கள்! ஆனால், 'அந்த மோட்டார் எப்படி வந்தது' என்று எண்ணிப் பார்ப்பது இல்லை!

இன்னமும் நாட்டிலே கள்ளமார்க் கெட்டும், கொள்ளை இலாபமடித் தலும் தடையிலலாமல் நடக் கின்றன!

பண்டித நேரு அவர்கள் ஒரு முறை, 'இந்த நாட்டு மக்கள் படாடோபத்தில் மயங்குகிறார் கள்; எப்படியும் பொருள் சேர வேண்டும் என்று கருதுகிறார் கள்; அதனால்தான் இவைகள் நடைபெறுகின்றன' என்று கூறி னார்.

நண்பர் ஜி. டி. நாயுடு அவர்கள் தம்மை முழு அளவுக்கு அதி லிருந்து விலக்கிக்கொண்டவரா வார்! தூங்குகிற நேரம் தவிர, மற்ற நேரங்களில், அவர் எதை யாவது செய்துகொண்டிருப் பார்! அவர் வெற்றி காணாத துறைகளே இல்லை!

பத்தாண்டுகளுக்கு முன்னால், 'இவருக்கு என்ன தெரியும்?' என்று கேட்கக்கூடிய நிலை இருந் தது! இன்று அந்த நிலை மாறி விட்டது!

காலத்தைப் பயன்படுத்திக் கொண்ட வித்தகர் அவர்!

எந்த அரசாக இருந்தாலும், அவரைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தயக்கம் காட்டாது!

விஞ்ஞானிகளும் மக்களும் ஏற் றுக்கொள்வதற்கு முன்பு அரசு ஏற்றுக்கொண்டால், 'அரசுக்கும் அவருக்கும் என்ன உறவோ' என்று பேசப்படும்!

மேல்நாடுகளில், 'பொழுது போத வில்லை' என்று கருதுகிறார்கள்! இங்கே, 'பொழுது போகவில்லை' என்று சொல்லுகிறார்கள்!

ஏதாவது புத்தகத்தை எடுத்து ஐந்தாறு பக்கம் படித்தால் அலுத்துவிடுகிறது!

நண்பரிடம் ஐந்து நிமிடம் பேசி னால், "எதைக் கேட்டுவிடு வாரோ" என்று நழுவப் பார்க் கிறோம்!

'வெளியே போய்வரலாம்' என்று புறப்படுகிறபோது, 'பார்த்த தையே திரும்பப் பார்ப்பதா' என்று கடற்கரைக்குச் செல் கிறார்கள்!

ஜி. டி. நாயுடு அவர்கள் காலத்தை முழுவதும் பயன் படுத்திக்கொண்டவர்!

இந்த நாட்டிலுள்ள ஏழ்மை, அறியாமையை அகற்ற அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ வேண்டும்!

'அவரை நாம் அறிந்துகொண்டு இருக்கிறோம்' என்பதைக் காட்டவே இந்த விழா நடை பெறுகிறது!"

ஜி.டி. நாயுடுவுக்கு 'டாக்டர்' பட்டம்

சென்னை, ஏப். 8—

ஜி. டி. நாயுடு அவர்களின் பிறந்த நாள் விழாவில், விழாக் குழுச் சார்பில் அண்ணாவரையும் வரவேற்றுப் பேசிய திரு. கி. ஆ.பெ. விசுவநாதம் அவர்கள்,

"ஜி. டி. நாயுடு அவர்களின் ஆராய்ச்சிப் பணியைப் பாராட்டும் வகையில் அவ ருக்குப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' படடம் வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்"

என்று விருப்பம் தெரிவித் தார்.

ஜி.டி. நாயுடுவுக்கு உருவச் சிலை

பெரியார் விருப்பம்

சென்னை, ஏப். 8—

நேற்று ஜி. டி. நாயுடு அவர்க ளின் பிறந்த நாள் விழாவைத் துவக்கிவைத்துப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பேசு கையில்,

"சென்னையில் நீலன் துரை யின் சிலை இருந்த இடத்தில் ஜி. டி. நாயுடுவின் உருவச் சிலையை அமைத்துச் சிறப் பிக்க வேண்டும்"

என்று விருப்பம் தெரிவித் தார்.

'நல்மரபுகள் நிலவுவதுதான் சனநாயகத்தின் ஆணிவேர்'

'சட்டப் பேரவையின் உரிமைகளை புறக்கணித்துவிட இயலாது'

அவைத் தலைவர்கள் மாநாட்டில் மக்களவைத் தலைவர் விளக்கம்

புதுடில்லி, ஏப். 8—

" சட்டமன்றத்தில் ஒரு கட்சிக்கோ அல்லது ஒரு கூட்டணிக்கோ பெரும்பான்மை இருக்கிறதா என்பதை— அதுவும், 'கட்சி விட்டுக் கட்சி மாறுவது' என்பது அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டிருக்கும் நிலைமையில்— முடிவு செய்யவேண்டியவர், ஆளுநர் அல்லர்; இதனை முடிவு செய்வதற்கு உரிய இடம் சட்டமன்றம்தான்!

" சட்டமன்றத்தைக் கூட்டும்படி முதலமைச்சர் ஆலோசனை கூறினாலன்றி, அவரை மீறி, சட்டமன்றம் கூடும்படி கவர்னர் உத்தரவிடலாகாது; சட்டமன்றம் கூடுவதற்குரிய நாளை நிச்சயிக்கும் உரிமை, முதலமைச்சருக்கு இருப்பதுதான் சரியானதாகும்; இதற்குரிய வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும்; இந்த மரபு, அனைத்து மாநிலத்திற்கும் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

" சட்டமன்றத்தின் பெரும்பான்மை பலத்தை முதலமைச்சர் இழந்துவிட்டாரா இல்லையா என்பதை எந்தச் சமயமும் சட்டமன்றம்தான் முடிவு செய்யவேண்டும்; 'முதலமைச்சருக்குப் பெரும்பான்மை பலமிருக்கிறதா என்பதை உறுதி செய்யும் பொறுப்பை எந்தச் சந்தர்ப்பத்திலும் கவர்னருக்குக் கொடுக்கக்கூடாது. சட்டமன்ற உறுப்பினர்களே இதுபற்றித் தத்தம் கருத்துக்களைக் கவர்னரிடம் எடுத்துச் சொன்னாலும் கவர்னர் அதில் தலையிடக்கூடாது"

என்று, நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் என். சஞ்சீவ ரெட்டி, சட்டமன்ற அவைத் தலைவர்களின் தனி மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் தெளிவுபடுத்தினார்.

மேற்கு வங்கம், பஞ்சாப் மாநிலங்களின் சட்டமன்ற அவைத் தலைவர்கள் அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் சூழ்நிலையில் கூட்டப்பட்ட அம்மாநாட்டில் அவர், 'சட்டமன்றம்தான் முக்கியம்; அவைத் தலைவர் அல்லர்; சட்டமன்றத்தை மீறி நடக்கவோ, அல்லது புறக்கணிக்கவோ அவர்களுக்கு உரிய அதிகாரம் எதுவும் கிடையாது' என்றும் விளக்கினார்.

"சட்டப் பேரவைக்கு உரித்தான அதிகாரங்களையும், பணிகளையும் அவைத் தலைவர், தாமே மேற்கொண்டுவிட இயலாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்கு வங்கம், பஞ்சாப் மாநில சட்டமன்றத் தலைவர்களின் சிக்கலான நடவடிக்கைகள் பற்றியும், கட்சி மாறும் உறுப்பினர்களின் செயல் குறித்தும் குறிப்பிடுகையில் அவர், 'இந்தப் பிரச்சினைகளுக்குப் பதில் கூற எந்த அரசியலமைப்பிலும் விளக்கமில்லை; எனவே, வலுவான சட்டமன்றை மரபை உருவாக்குவது அவசியம்' என்றார்.

அவைத் தலைவர்களின் முன்னுள்ள பிரச்சினைகள் பற்றியும், அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளின் நிலை குறித்தும் மேலும் அவர் சுட்டிக்காட்டி விளக்கியதாவது :—

அவைத் தலைவரின் கடமை அதுவல்ல!

" 'கீழ் சபைக்குத்தான் அமைச்சரவை கூட்டாகப் பொறுப்பு சொல்ல வேண்டியதாகும்' என்று அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. பாராளுமன்ற சனநாயகத்தின் ஆணிவேரே இதுதான்!

அமைச்சரவை, சட்டமன்றத்திற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. ஒரு அமைச்சரவை, 'சட்ட ரீதியானதா இல்லையா' என்பது பற்றிப் பிரச்சினை எழுந்தால், அதைத் தீர்த்துக் கொள்வதற்குத் தகுந்த இடம் நீதிமன்றம்தான்!

சட்டமன்றம் விரும்புமானால், அந்த அமைச்சரவைக்கு எதிராக வாக்களித்து வெளியேற்றவும் செய்யலாம்; இதில் அவைத் தலைவருக்கு வேலையே இல்லை. 'அமைச்சவை சட்ட ரீதியானதுதானா' என்பது பற்றித் தீர்ப்பளிக்கும் பணியை, தம்முடைய தலையில் அவர் சுமத்திக்கொண்டு, இத்துறையில் தனது கருத்தை சட்டமன்றப் பேரவை வெளியிட இயலாதவாறு செய்வாரானால், அவையின் பணியையும், நீதிமன்றத்தின் பணியையும் 'அபகரித்து'க் கொள்பவராகிறார்; இதன் மூலம், அவையின்பால் அமைச்சரவைக்கு உள்ள பொறுப்புக்களிலிருந்தும், கடமைகளிலிருந்தும் அதனை விடுவித்து விடுபவராகிறார்!

மதிப்புக்குரிய ஒன்று!

அவைத் தலைவர் பதவி, மதிப்புக்குரிய ஒன்றாகும். அவருக்குரிய மதிப்பை அளிக்காவிட்டால், தமது பொறுப்புள்ள பணிகளைத் திறம்பட நிறைவேற்ற இயலாது!

அவைத் தலைவரை நீக்குவதற்கான பிரேரணைகளையோ தீர்மானங்களையோ, போதிய சிந்தனையின்றிக் கொண்டுவரலாகாது. இது சம்பந்தமாக அரசியல் சட்டத்திலுள்ள பிரிவு— விதிகள்—மரபுகளைக் கண்டிப்பாகப் பின்பற்றியாக வேண்டும்.

மரபுகள் மீறப்படும் நிலைமை உருவாகுமானால்...!

மரபுகள் நிலைநாட்டப்படாவிடில், அவைக்குத் தலைமை தாங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் குழுவைச் சேர்ந்தவர்களில் எவர் வேண்டுமானாலும் கூட, பேரவை நடைபெற இயலாமல் செய்துவிட முடியும்; தங்களுடைய சாதாரண உரிமைகளைக்கூடப் பயன்படுத்த இயலாதவாறு சட்டமன்ற உறுப்பினர்களைத் தடுத்துவிட முடியும்.

புறக்கணிக்க இயலாது!

'எவ்வளவு நேரம் வேண்டும்— என்னென்ன அலுவல்களைக் கவனிக்க வேண்டும்' என்பதுபற்றி முடிவு செய்யும் உரிமை, அவைக்கு மட்டுமே உண்டு என்பதை, எந்த அவைத் தலைவரும் புறக்கணித்துவிட முடியாது!

'கட்சித் தாவல்' என்ற நச்சுப் போக்கால்...!

அரசியல் சட்டத்திலோ அல்லது விதிகளிலோ குறைபாடுகள் இருந்து அதனால் அண்மைச் சம்பவங்கள் நடந்துவிடவில்லை; அதைவிட ஆழ்ந்த காரணங்களால் ஏற்பட்டவைகளாகும். பல அரசியல் கட்சிகளைக் கடுமையாகப் பாதித்துள்ளதும், அரசுகளைப் பலவீனப்படுத்தியுள்ளதுமான 'கட்சித் தாவல்' என்ற நச்சுப் போக்கினால் ஏற்பட்டதாகும் இது! துரதிருஷ்டவசமாக, இந்த அதிகார வேட்டைப் புயலில் சில அவைத் தலைவர்கள் சிக்கிவிட்டிருக்கிறார்கள்!

விலகுவதே மேல்!

அற்பக் காரணங்களுக்காக அல்லாமல் போதிய காரணங்களுடன் அவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால், அந்தத் தீர்மானத்தைப் பேரவை விவாதிப்பதற்கு முன்போ அல்லது நிறைவேற்றுவதற்கு முன்போ அவரே பதவியைவிட்டு விலகிவிடுவது கண்ணியமாகும்."

இரஷ்ய விண்வெளி விமானிகள் கண்டுபிடிப்பு!

மாஸ்கோ, ஏப். 5—

"சுக்கிரன் கிரகத்தில் உள்ள மேகங்களில் தண்ணீர் இருப்பதை, இரஷ்ய விண்வெளி விமானிகள் கண்டுபிடித்தனர்"

என்று, இரஷ்யச் செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

காந்தியார் இலட்சியங்கள் நிறைவேறிற்று?

வி. வி. கிரி வேதனை

நெல்லூர், ஏப். 8—

"நாடு சுதந்தரமடைந்ததற்குப் பிறகு, காந்தியாரின் இலட்சியங்கள் நிறைவேறாத நிலைமையே இன்னும் நீடிக்கிறது"

என்று இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி, மனவேதனையுடன் கூறியிருக்கிறார்.

"கிராமங்களுக்குச் சென்று சமூகப் பணியாற்றுமாறும், அங்கெல்லாம் குடிசைத் தொழில்களை நிறுவுவதற்கு உதவுமாறும் காந்தியார் கேட்டுக் கொண்டார்; அக்கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலைமையே நீடிக்கிறது; ஆகவே இளைஞர்கள், வேலைதேடி நகரங்களுக்கு ஓடக்கூடாது" என்றும் வி. வி. கிரி சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

கட்சி மாறும் போக்கையும், 'கேரோ' கிளர்ச்சியையும் கண்டித்த அவர், 'நாட்டிற்கு வலிமைமிக்க தலைமை இருப்பது அவசியம்; அவ்வாறு இல்லாவிடில், நாடு சுதந்தரத்தை இழந்துவிடும்' என எச்சரித்தார்.

பத்திரிகைக் காகித உற்பத்தி

அரசே மேற்கொள்ள முடிவு

புதுடில்லி, ஏப். 8—

"கேரள மாநிலத்திலும், இமாசலப் பிரதேசத்திலும் ஒவ்வொரு பத்திரிகைக் காகித ஆலையைப் பொதுத் துறையில் நிறுவ முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என, செய்தித் துறை அமைச்சர் கே. கே. ஷா, பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

சிறு ரகப் பத்திரிகைகளுக்குக் காகிதம் வினியோகிப்பது சம்பந்தமாக அவர் குறிப்பிடுகையில், சிறு ரகப் பத்திரிகைகளின் தேவையை முழு அளவில் அரசு நிறைவு செய்வதாகவும், ஒதுக்கப்பட்ட முழு அளவையும் அவைகள் பயன்படுத்தாதது இதற்கு உதாரணமாகும் என்று கூறினார்.

காயமடைந்தும் கடமையாற்றிய போலீசு அதிகாரி

அரசின் சிறப்புப் பரிசு கிடைக்கப் பெற்றார்

ஐதராபாத், ஏப். 5—

சென்ற பொதுத் தேர்தலின் போது ஆந்திர முதலமைச்சர் பிரும்மானந்த ரெட்டிக்குப் பாதுகாப்புப் பணிக்காகச் சென்ற மாவட்ட உதவிப் போலீசு அதிகாரி, தமது கண்களில் ஒன்றை இழந்ததற்காக ஆந்திர அரசு அவருக்குச் சிறப்புப் பரிசு அளித்திருக்கிறது.

குண்டூர் மாவட்டத்தில் முதலமைச்சர் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்தபோது, ஜீப் காரில் உடன் சென்ற போலீசு அதிகாரியின் கண்ணில் ஒரு பெண் தொண்டர் வைத்துக்கொண்டிருந்த கம்பின் கூரிய முனை பட்டுவிட்டது. பிறகு அந்தக் கண் எடுக்கப்பட்டு செயற்கைக் கண் பொருத்தப்பட்டுவிட்டது.

அவருக்குத்தான் இரண்டு சம்பள உயர்வுகள் சிறப்புப் பரிசாக அளிக்கப்பட்டிருக்கிறது.

"அவரது கடமை உணர்வையும், கடுமையாக காயம்பட்டிருப்பினும் முதலமைச்சருக்குப் பாதுகாப்புப் பணி தொடர்ந்து செய்த தியாக உணர்வையும் பாராட்ட இப்பரிசு அளிக்கப்படுகிறது"

என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

கவர்னர் மாளிகையில் மதுப்புட்டிகள்!

கள்ளச் சந்தையில் விற்கப்பட்டனவாம்

இராஜஸ்தான் சட்டமன்றத்தில், ஜனசங்க உறுப்பினர் திரு. எஸ். சி. அகர்வால் பேசுகையில் ஒரு பரபரப்புத் தரும் தகவலை வெளியிட்டார்.

டாக்டர் சம்பூர்ணானந்தா கவர்னராக இருந்த காலத்தில் இரண்டரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மது வகைகள் கவர்னர் மாளிகைக்காக வாங்கப்பட்டன என்று கூறி, 'அவை, வரி இல்லாமல் எங்கிருந்து வாங்கப்பட்டன என்பது குறித்து விசாரணை நடத்தவேண்டும்' என்று கோரினார்.

'இம் மதுவகைகள், கவர்னர் மாளிகையிலிருந்து கள்ளச் சந்தையில் விற்கப்பட்டன' என்றும், 'ஒயின் புட்டி ஒன்று ரூ. 9-க்கு வாங்கப்பட்டு ரூ. 85-க்கு விற்கப்பட்டிருக்கிறது' என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கிரசுக்கு நன்கொடை கொடுத்ததால் தொழிற்சாலைக்கு வரிவிலக்கு?

இராஜஸ்தான் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டு

ஜெய்ப்பூர், ஏப். 8—

இராஜஸ்தான் சட்டமன்றத்தில் ஜனசங்க உறுப்பினர் திரு. எஸ். சி அகர்வால் பேசுகையில், கோட்டா என்னுமிடத்தில் உள்ள ரேயான் தொழிற்சாலைக்கு 'ஆக்ட்ராய்' வரியிலிருந்து கடந்த நான்காண்டுகளுக்கும் சேர்த்து வரிவிலக்கு அளித்திருப்பதாகத் தெரிவித்ததும், அவையில் பரபரப்பு ஏற்பட்டது.

பரபரப்புக்கிடையே ஜனசங்கக் கட்சித் தலைவர் திரு. பைரான் சிங் செகவாட் எழுந்து, 'கோட்டா ரேயான் தொழிற்சாலை, காங்கிரசுக் கட்சிக்கு ரூ. 1 இலட்சம் நன்கொடை கொடுத்ததற்கு ஈடாக, ரூ. 78,000-வரை வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது' எனக் கூறினார்.

தொடர்ந்து பேசிய திரு. எஸ். சி. அகர்வாலும், ச. சோ. கட்சி உறுப்பினர் நாத்பாயும், 'இதுபற்றி விசாரணை நடத்த வேண்டும்' என்று கோரினர்.

தொழிற்சாலையை ஊக்குவிப்பதற்காகவே இந்த வரிவிலக்கு அளிக்கப்பட்டதாக சுரங்கத்துறை அமைச்சர் திருமதி பிரபா மிஸ்ரா கூறினார்.

அமைச்சர் பிரபாபாய் பதிலளிக்கையில், காங்கிரசுக் கட்சி நன்கொடை பெற்றதாகக் கூறியதை மறுத்தார்; ஆனால், 'விசாரணை நடத்தவேண்டும்' என்ற எதிர்க் கட்சியின் கோரிக்கைக்கு எவ்வித பதிலும் அளிக்கவில்லை.

நீரின் வழி நெருங்கி வாழ்வோம்!

90 உலக நாடுகளின் ஒருமித்த குரல்

மதுரை தமுக்கம் திடலில் 8—4—68 முதல் 14—4—68 முடிய நடைபெறும் 'நீர் வளம் காணும் முயற்சி' என்ற கண்காட்சியையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது :—

வாஷிங்டன் நகரில் சென்ற ஆண்டு மே திங்களில், 'அமைதிப் பணிக்குத் தண்ணீர்' என்ற பெயரில் ஓர் உலக மாநாடு நடைபெற்றது. மத்தியில் ஓர் அழகு நீரூற்று அமைத்திருந்தார்கள். பல நாடுகளிலுள்ள ஆறுகளிலிருந்தும், ஏரிகளிலிருந்தும் கொண்டுவரப்பட்ட தண்ணீர் இந்த இந்த நீரூற்றில் ஒன்று கலந்து, பொங்கிச்சொரிந்து கொண்டிருந்தது.

உலகிலுள்ள நீர் வளங்களின் வளர்ச்சிக்குநாடுகள்ஒன்றுசேர்ந்து உழைப்பதைக் குறிப்பதற்காக இந்த அழகு நீரூற்றை அமைத்திருந்தார்கள்.

உலக நாடுகளின் ஒத்துழைப்பு என்பதே உண்மையில் மாநாட்டின் கருப் பொருளாக விளங்கியது.

பத்து நாள் நடந்த இம்மாநாட்டில் 90 நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும், வல்லுநர்களுமாகக் கிட்டத்தட்ட 5,000 பேர் பங்கு கொண்டனர்; கிட்டத்தட்ட 1,000 உரைகளும், விஞ்ஞானக் கட்டுரைகளும் வழங்கினர். அதிபர் ஜான்சன் யோசனையின்பேரில் இம்மாநாடு கூட்டப்பெற்றது.

" ஏற்கனவே ஒரு பொதுப் பிரச்சினையாகிவிட்ட அல்லது விரைவாக அப்படி ஆகிவரும் ஒன்றைத் தீர்க்கப் பொது முயற்சி தேவை" என்று அனைவருமே ஐயத்துக்கு இடமின்றி வலியுறுத்தினர்.

உலகின் பெருகிவரும் மக்கள் தொகைக்குப் போதுமான அளவில் நல்ல தண்ணீர் வழங்குவதே அது!

(4-ம் பக்கம் பார்க்க)

லூதர் கிங் குறிக்கோள்

'எத்தனை நாள் வாழ்ந்தோம்' என்பதல்ல பிரச்சினை

எந்த இலட்சியத்திற்காக வாழ்ந்தோம்' என்பதே முக்கியம்

நியூயார்க், ஏப். 8—
தமது கணவர் எந்த நேரத்திலும் கொல்லப்படுவார் என்பதை தாம் எதிர்பார்த்தே இருந்ததாக, டாக்டர் லூதர் கிங்கின் மனைவி கூறினர்.

செய்தியாளர் ஒருவருக்குப் பேட்டியளித்த அவர் தெரிவித்த உள்ளமுருக்கும் தகவல் வருமாறு :—

"என் கணவரின் பாதுகாப்புப் பற்றி நான் நீண்ட காலமாகவே கவலையடைந்துள்ளேன். 1956-ல் எங்கள் வீடு குண்டு வீச்சுக்குள்ளாயிற்று; அப்போது, எங்கள் உயிருக்கு அபாயம் இருப்பதை உணர்ந்தோம். நீக்ரோவர் அறப்போரை நீடிப்பதா வேண்டாமா என்றுகூடச் சிந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தீவிரச் சிந்தனைச்குப்பின் எங்கள் போராட்டம் சரியானதுதான் என்றும், எங்கள் இலட்சியத்திற்காக என்ன நேர்ந்தாலும் ஏற்பது என்றும் முடிவுசகு வந்தோம்.

'ஆண்டவன் எங்களைப் பாதுகாப்பார்; எங்களுக்கு எதுவும் நேராது' என்று நான் கருதவில்லை. போராட்டத்தில் என் கணவர் இறக்கவேண்டும் என்பது ஆண்டவனின் சித்தமாகக் கூட இருக்கலாம்.

முன்னேற்றத்திற்காகக் சில சமயம் யாராவது ஒருவர் உயிர்த் தியாகம் செய்துதானே ஆகவேண்டும்?

எனவே, 'எத்தகைய தியாகத்துக்கும் நான் தயாராகி வருகிறேன்; அத்தகைய தியாகம் தகுதியானது என்றும் கருதுகிறேன்; என் குழந்தைகளைப் பற்றி மட்டும் நான் கவலைப்படவில்லை; சமுதாயத்திற்காகவும் உலகிற்காகவும் கவலைப்படுகிறேன்; எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பது பெரிதல்ல; எந்த இலட்சியத்திற்காக வாழ்ந்தோம் என்பதே முக்கியம்' என்று என் கணவரே கூறுவதுண்டு. நல்லதொரு இலட்சியத்திற்காக வாழ்ந்து இளமையில் மாண்டபோதிலும், எணபது வயதுவரை வாழ்ந்தவரைவிட உலகிற்கு அதிகம் உதவியவராகலாம். சாவு அவர் இலட்சியத்தை அழித்துவிடாது."

இந்தப் பேட்டி, லூதர் கிங் கொலை செய்யப்பட்டபின் நடந்ததல்ல—பல நாட்களுக்கு முன்பு ஒரு நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்சண்டவாறு திருமதி கிங் பதிலளித்தார்.

ஊழல் புரியும் ஊழியர்கட்கு 50வயதில் ஓய்வு

மத்திய அரசின் புதிய திட்டத்துக்கு எதிர்ப்பு

புதுடில்லி, ஏப். 8—
இலஞ்ச ஊழலில் ஈடுபட்டதாகவோ, திறமை குறைந்தவர்களாகவோ சந்தேகத்துக்குள்ளாகும் மத்திய அரசு ஊழியர்களை, அவர்களுடைய 50 வயது முடிந்ததும் அல்லது 25 ஆண்டு ஊழியம் முடிந்தும பதவியிலிருந்து ஓய்வு பெறச் செய்யும் திட்டம் பறறி அரசு ஆராய்ந்து வருகிறதாம். அப்படிப் பட்ட ஊழியர்கள் தமது நிலையை விளக்கி வாதாடுவதற்கு வாய்ப்பு அளிச்சப்படமாட்டாது என்றும் தெரிகிறது.

இத்திட்டத்துக்கு மத்திய அரசு ஊழியாகள் எதிாப்புத் தெரிவித்துள்ளனர்.

ரூ. 120 கோடி இழப்பு

மத்திய அரசுத் தொழிற்சாலை காட்டும் கணக்கு

புதுடில்லி, ஏப். 8—
இந்திய அரசின் மிகப் பெரிய தொழில் நிறுவனமான இந்துஸ்தான் உருக்கு நிறுவனத்துக்கு, சென்ற மாத இறுதிவரையில் ரூ. 120 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

சென்ற நிதியாண்டில் மட்டும் ரூ. 40 கோடி ஏற்பட்டதாம்.

இந்தப் பாதகமான நிலைமையைத் தவிர்க்க, தீவிர ஏற்றுமதி முயற்சியை இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளதாகவும், இதனல் திருப்திகரமான பலன் கிடைத்துள்ளதாகவும் உருக்கு அமைச்சுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

மின் கழகக் கணக்காயர் சங்க உடுமலைக் கிளை

தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்க உடுமலைக் கிளையின் நிர்வாகிகள் வருமாறு :—

செயலாளர் : கு. கனகராசன்; துணைச்செயலாளர் : கே. ஆர். சுப்பிரமணியம்; பொருளாளர் : கோவிந்தசாமி; நிர்வாகக்குழு உறுப்பினர்கள் : தண்டபாணி, சையது அமீது, சண்முகராசன், பஷீர் அகமது, து. கோவிந்தராசன்; பொதுக்குழு உறுப்பினர்: பேரா நாயுடு.

நெய்வேலி தொ. மு. சங்கச் சாதனை

கிராக்கிப் படி வழங்க நிர்வாகம் இசைந்தது

கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் ஒப்பந்தம் ஏற்பட்டது

1—11—68 முதல் கிடைக்க வேண்டிய கிராக்கிப் படி இதுவரையில் நெய்வேலி தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், 17—3—68-ல் மாபெரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தி கோரிக்கையை வற்புறுத்தியது.

1-4-68 முதல் 3-4-68-வரை நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தையில் சங்கத்தின் சிறப்புத் தலைவர் எஸ். இராமச்சந்திரன் எம்.எல் ஏ., உ. கணபதி இராமசுப்பையா எம் ஏ., எஸ். ஆண்டகுருநாதன் (செயலாளர்), டி. இராமசாமி (துணைத் தலைவர்), ஆபிரகாம் ஆகியோர் கலந்துகொண்டனர்; இதன் பலனாக, 4—4—68-ல் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது; இது தொழிலாளர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

ஒப்பந்த விவரம்:— 1-11-68 முதல் கிராக்கிப் படி, நிலுவைத் தொகையுடன் கிடைக்கும்; வீட்டு வாடகையில் உயர்வு கிடையாது; வாடகையில் நிர்வாகத்தின் நிபந்தனை நீக்கம் செய்யப்பட்டது; ஊழியர்களுக்கு 16 நாட்கள் விடுமுறை நிர்ணயிக்கப்பட்டது; மே நாள் விடுமுறை 1—5—68-ல் விடப்பட்டு அதற்கு ஈடாக ஆயுதபூசை நாளில் பணியாற்றப்படும்; சிவில் பிரிவுத் தொழிலாளர்கள் படிப்படியாக நிரந்தரம் செய்யப்படுவர்; ஊதிய உயர்வு பற்றி மீண்டும் கூடிப் பேசப்படும்.

மேற்படி ஒப்பந்தத்தில், நெய்வேலி நிர்வாகத் தலைமை அதிகாரி, நிர்வாக இயக்குநர் கோபால் குமாரமங்கலம் ஆகியோரும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., எஸ். ஆண்டகுருநாதன், டி. இராமசாமி ஆகியோரும் கையொப்பமிட்டனர். திரு. உ. கணபதி ராமசுப்பையா சாட்சியமாகக் கையொப்பமிட்டார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழக அறிக்கை : 1/68

தி. மு. கழகப் பொதுத் தேர்தல்

1. 1967-ல் நிறைவேற்றப்பட்ட தி. மு. கழகத்தின் புதிய சட்ட திட்டங்கள், விதி 25 பிரிவு 4-ன்படி, கழகத்தின் பல்வேறு அமைப்புகளுக்கான தேர்தல் நாட்கள் கீழ்க் கண்டவாறு உறுதி செய்யப்படுகின்றன :—

	அமைப்புகள்	நாட்கள் 1968
(அ)	சிற்றூர்-பேரூர்க் கிளைகள், பெருநகர உட்கிளைகள், சென்னை நகர வட்டக் கிளைகள்	மே 4, 5 சனி, ஞாயிறு
(ஆ)	நகர--பெருநகரக் கிளைகள்	மே 19 ஞாயிறு
(இ)	வட்டக் கிளைகள் (சென்னை நகரப் பகுதிக் கிளைகள்)	ஜூன் 2 ஞாயிறு
(ஈ)	மாவட்டக் கழகங்கள்	ஜூன் 23 ஞாயிறு
(உ)	தலைமைக் கழகம்	ஜூலை 21 ஞாயிறு

2. 1965 மே திங்களுக்குப் பிறகு உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்தும், புதிய உறுப்பினராகச் சேர்ந்தும், தலைமைக் கழகத்திலிருந்து முறைப்படி அனுப்பிவைக்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொள்ள உரிமையுடையவர்கள் ஆவர்.

3. தேர்தல் நடத்தும் முறைகள், கிளைகள்—உறுப்பினர்கள்—தேர்தல் ஆணையாளர்—வேட்பாளர் ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத் தாள் போன்ற விவரங்கள், தலைமைக்கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ள 'தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த வெளியீட்டின் பிரதியும், திருத்தப்பட்ட புதிய சட்டத் திட்டப் பிரதியும் ஒவ்வொரு கிளைக்கும் தலைமைக் கழகத்திலிருந்து விரைவில் அனுப்பி வைக்கப்படும். தனிப்பட்ட முறையில் தேவைப்படுவோர் உரிய கட்டணம் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம்.

'அறிவகம்'
சென்னை-13.
22—3—'68

---அண்ணுதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க

செம்போடையில் என். வி. நடராசன்

உயர்நிலைப்பள்ளியில் சிறப்புரை

திருத்துறைப்பூண்டி வட்டம், செம்போடை உயர்நிலைப் பள்ளி தி. மு. கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களும், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. ந. தருமலிங்கம் அவர்களும் வருகை தந்தனர்.

11—3—68 மாலை 3-30 மணிக்கு இப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் சிறப்பு விழா கிராமத் தலைவர் ந. கணேசம் பிள்ளை தலைமையில் துவங்கியது.

உயர்நிலைப் பள்ளியின் சார்பில் தலைமையாசிரியர் அனந்தநாராயணன் வரவேற்றுர்.

ஊராட்சி மன்றச் சார்பில், மா. வைத்தினுதன் வரவேற்றுர். தி. மு. க. சார்பில் இ. முருகையன் வரவேற்றுர்.

திரு. என். வி. நடராசன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில், மாணவர்களுடைய நல்லொழுக்கத்தினை எடுத்துக்கூறியும் மாணவர்களுடைய முன்னேற்றத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் தி. மு. க. அரசு எல்லா வகையிலும் உதவும் என்றும் கூறினர்.

திரு. ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ. பேசுகையில், மாணவர்களுடைய சேவை எந்த அளவுக்கு எதிர்காலத்தில் தேவை என்பதனை விளக்கினர்; பள்ளியின் வளர்ச்சிக்கும், மாணவர்களுடைய முன்னேற்றத்திற்கும் இவ்வூர்ப் பொது மக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

மற்றும் சிவகனக சுந்தரம், வே. கோதண்டபாணி ஆகியோரும் பேசினர். திரு. சி. கனக சுந்தரம் நன்றி கூறினர்.

போர்க் கப்பல்களில் டெலிவிஷன்!

பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த போர்க் கப்பல்கள், மற்றும் போர் விமானமுள்ள கப்பல்களில், சூழ்நிலைகளைத் துல்லியமாகப் பார்த்துத் தெரிந்துகொள்வதற்கு உதவியாகத் தற்போது டெலிவிஷன் பொருத்தப்படுகிறது

அண்மையில் பிரிட்டனின் இரு போர்க்கப்பல்களில் டெலிவிஷன் பொருத்தப்பட்டது. இத்துடன் பிரிட்டனின் எல்லா போர்க் கப்பல்களிலும் டெலிவிஷன் இடம் பெற்றுவிட்டன.

கடற்படைத் தளபதிகளுக்கு இந்த அமைப்பு பெரிது பயன்படுவதால் இந்த டெலிவிஷன் முறை பிற நாடுகளிலும் பிரபலமடைந்து வருகிறது.

விவேகானந்தா பொறியியல் தொழிலாளர் சங்கம்

சென்னை விவேகானந்தா இண்டஸ்டிரியல் எஞ்சினியர்கள்

பர்மா அகதிகள் பிள்ளைகளுக்குத் தொழிற் பயிற்சி

தனி வகுப்பு நடத்த அரசு ஏற்பாடு

சென்னை, ஏப் 5—
குறைந்த கல்வித் தகுதியுள்ள பர்மா அகதிகளின் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக முதனிலைத் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குவதற்கான திட்டத்துக்குத் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ளும் எண்ணத்துடன் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் 'மாணவர்களை அந்த வகையில் உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம்.

மூன்றுவது படிவம் (ஒன்பதாம் வகுப்பு) முதல் ஐந்தாவது படிவம் வரையில் அதற்கு நிகரான கல்வித் தகுதி பெற்ற மாணவர்கள் இந்தப் பயிற்சி நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்ந்து படிப்பதற்குத் தேவையான கல்வித் தரம் உண்டாவதற்காக இவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகியவை கற்றுத் தரப்படும்.

செங்கற்பட்டு மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் உள்ள அகதிகள் முகாமில் வகுப்புகள் நடத்தப் படும்.

பயிற்சி பெறுபவர்களுக்கு இந்த முகாமிலேயே தங்குவதற்கான வசதிகள் தரப்படும்.

பெற்றேரை விட்டுப் பிரிந்து மாணவர் விடுதிகளிலோ அல்லது மற்ற விடுதிகளிலோ தங்கியிருந்து படிக்கும் மாணவர்கள், அவர்கள் பெற்றேரின் மாத வருமானம் ரூ. 250-க்குக் குறைவாக இருந்தால், மாதமொன்றுக்கு தலா ரூ. 40 உதவிப் பணமாகப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

மேலும், இத்தகைய மாணவர்கள் புத்தகங்களுக்காக தலா ரூ. 30 பெறவும் தகுதியுடையவர் ஆவர்.

1968 ஏப்ரல் மாதத்திலிருந்து இந்தப் படிப்புத் தொடங்கும்.

இதில் சேர விரும்பும் மாணவர்கள், அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள், தொழில் வாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி இயக்குநர் அல்லது கும்மிடிபூண்டியிலுள்ள தனித் துணைக் கலெக்டர் (பர்மா அகதிகள்) ஆகியோரை அணுகலாம்.

பொதுப் பணித்துறைத் தொழிலாளர் சங்கம்

எஸ். இராக்வானந்தம் தலைவராகத் தேர்வு

சென்னை பொதுப்பணித்துறைத் தொழிலாளர் சங்கம் பொது உறுப்பினர்க் கூட்டத்தில், 1968-ம் ஆண்டிற்குரிய நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டவர்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : எஸ். இராகவானந்தம் எம்.சி.; துணைத்தலைவர் : த. சேதுராசன்; செயலாளர்கள் : பி. என். எத்திராசன், பா. தங்கலிங்கம், பொருளாளர் : ம. வெ. தணிகாசலம், செயற்குழு உறுப்பினர்கள் :—

க. தனபால், பா. முருகேசன், ஏ. சுப்பிரமணியம், கோ. நாராயணசாமி, சுப்பிரமணியம் சம்பந்தம், பரமசிவம், மா. நாகவேலு, சிட்டிபாபு ராஜா. என். வி. வேலாயுதபாணி, அந்தோணி, கோபால் வேதநாயகம், சி. பாலராசன், கா. ரா. விருபாக்கன்.

தொழிற் சங்க நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் : கோ. தி. மகேசுவரன்; துணைத்தலைவர் : சுப்பராயன்; செயலாளர் : எம். பால் நடராசமூர்த்தி; பொருளாளர் : ஜி. துரைராஜ்; செயற்குழு உறுப்பினர்கள் : கே. பி. இராமன், எஸ். இ. பாலசுந்தரம் இ. கௌரிசங்கர், கே. சந்திரன், எம். இராமன்.

வன்முறைச் செயல்கள் மூலம் ஏதும் சாதிக்க இயலாது

"வன்முறைச் செயல் மூலம் எதையும் சாதித்துவிட முடியாது!

"உயிர்த் தியாகம் புரிந்தவர்களின் கொள்கை ஒருபோதும் செத்துப்போகாது!

"ஒருவரைக் கொல்வதன் மூலம் 'அவரது கொள்கையைத் தீர்த்துக்கட்டிவிடலாம்' என்று நினைப்பது தவறு!

"மறைந்து நின்று சுடுபவன் வீரனல்லன்—அவன் ஒரு கோழை!

"கட்டுக்கடங்காமல் கலகம் செய்யும் கும்பலின் குரல், மக்களின் குரல் அல்ல—அது பைத்தியக்காரர்களின் குரலாகும்!"

---இராபர்ட் கென்னடி

(லூதர் கிங் கொலையுண்டது பற்றி)

ஜி. டி. நாயுடுவுக்குத் தமிழ் மக்கள் காட்டிய நன்றியுணர்வு

தலைநகரில் சிறப்பான விழா--மாநகராட்சி வரவேற்பு

முன்னாள்--இந்நாள் அமைச்சர்கள் புகழ்மாலை; ஆராய்ச்சிப் பணிக்கு நிதியளிப்பு

சென்னை, ஏப். 8 —

அறிவியல்---தொழிலியல் மேதையான கோவை திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் 75-வது பிறந்த நாளையொட்டி, நேற்று மாலை தமிழகத் தலைநகரான சென்னையில், தமிழ் மக்களின் சார்பில் மாபெரும் விழா நடைபெற்றது.

மாநகராட்சி நேரு விளையாட்டரங்கில் முன்னாள் அமைச்சர் தமிழவேள் பி. டி. இராசன் பார்-அட்-லா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா, முன்னாள் முதலமைச்சர்களான ஓமந்தூர் பி. இராமசாமி, காமராசர், மத்திய அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் ஆகியோர், ஜி. டி. நாயுடு அவர்களின் அறிவாற்றலையும், அரும் பணிகளையும் பாராட்டிப் பேசினர்.

திரு. கருமுத்து தியாகராசனார், பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் ஆராய்ச்சிப் பணிக்காக, பொதுமக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியும் அளிக்கப்பட்டது.

பல்வேறு நிறுவனங்கள் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு வாழ்த்து மடல்களும் வாசித்து அளிக்கப்பட்டன.

விழாக் குழுச் சார்பில் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திரு. ஜி. டி. நாயுடு தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துப் பேசினார்.

மாநகராட்சி வரவேற்பு

பொது மக்கள் பாராட்டு விழாவுக்கு முன்னதாக, மாநகராட்சி சார்பில் திரு. ஜி. டி. நாயுடு அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

'மை லேடிஸ்' பூங்காவில், தேநீர் விருந்துக்குப் பின் வரவேற்பு மடலை, மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் படித்தளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், திரு. ம. பொ. சிவஞானம், மற்றும் நகரப் பிரமுகர்கள்—உயர்தர அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அ. தமிழரசு குழுவின் கலை நிகழ்ச்சி

ஏப். 10, 11: திருச்சி நகரம்; 12, 13: அறந்தாங்கி; 14: பட்டுக்கோட்டை: 15: மாயூரம்; 19, 20: தஞ்சை நகரம்; 25, 26: கோவை மாவட்டம்; 28: திண்டுக்கல்.

பர்மாத் தமிழர்கட்கு வேலை வாய்ப்பு

நகராட்சிகளுக்குத் தமிழக அரசு ஆணை

சென்னை, ஏப். 7—

பர்மாவிலிருந்து அகதிகளாகத் திரும்பி வேலையில்லாது இன்னலுறும் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்குடன், நகராட்சி மன்றங்களில் பர்மா தமிழர்களுக்கு வேலை தரும்படி, தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இது குறித்துத் தமிழகத்தின் அனைத்து நகராட்சி மன்றங்களுக்கும் அனுப்பியுள்ள ஆணையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"நகராட்சி மன்றத்தில் புதிதாக வேலைக்கு ஆள் நியமனம் செய்யும்போது பர்மா அகதிகளுக்கு வேலை தரவேண்டும்; வயது வரம்பு தொடர்பாகத் தனிச் சலுகை அளிக்க வேண்டும்."

நீரின் வழி நெருங்கி...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"எல்லைக் காவலாளர்களைக் கண்டு மேகங்கள் நின்றுவிடுவதில்லை" என்று ஒருவர் கடுமையாகவே சொன்னார். நாடுகளின் எல்லைகளைப் பார்த்துக்கொண்டு மழை பெய்வதில்லை!

தனி நபரோ, ஓர் ஊராரோ பயன்படுத்தும் கிணற்றுத் தண்ணீர், புவி ஈர்ப்பு விதிகளின்படி நிலத்துக்கு அடியில் ஓடுகிறதே ஒழிய, சட்டமன்றம் விதிக்கும் கட்டளைப்படி அல்ல!

பல ஆறுகள் ஒரு நாட்டில் தொடங்கிப் பல நாடுகள் வழியாக ஓடுகின்றன; சில ஏரிகள் இரண்டு நாடுகளில் பறந்துகிடக்கின்றன; மலையில் பிறக்கும் ஓர் ஆறு கடலில் போய் அடையும்வரை ஒரே நாட்டுக்குள் ஓடுவதென்பது மிக அரிது!

பண்ணை நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக வகை தொகை இல்லாமல் ஆற்றிலிருந்து நீர் எடுப்பது, போக்குவரத்துக்கும் மீன் பிடிப்பதற்கும் அது பயன்படுவதைக் குறைத்துவிடக்கூடும் அல்லது கெடுத்துவிடக்கூடும்.

ஆற்றில் விடப்படும் கழிவு நீரும், கொண்டுபோய்க் கொட்டும் குப்பையும் ஊருக்கு அது குடிதண்ணீர் வழங்குவதைக் கெடுத்து விடக்கூடும்,

கருத்துடன் வடிவம் வகுத்து அமைத்து நடத்தும் அணைகள், ஆற்று வெள்ளத்தைத் தடுக்க முடியும்; விரிவான பகுதிகளுக்குக் குறைந்த விலையில் மின்விசை வழங்கும் புனல் மின்விசை நிலையங்கள் நிறுவ வகைசெய்யும்; வறட்சிக் காலங்களில் உணவு உற்பத்திக்கும், வீட்டு உபயோகத்துக்கும், தொழில் துறைக்கும் தண்ணீரைச் சேமித்து வைத்து வழங்கும்: வாழ்க்கை நிலை மேம்படத் துணை செய்யும்.

கழிவு நீரைச் சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் கொண்ட ஒரு நீர் வள வளர்ச்சித் திட்டம், ஓர் ஆற்றின் கரையோரங்களில் வாழ்வோருக்கு அதன் பயன்களைப் பெருக்க முடியும்; நீச்சல் குளங்கள், பூங்காக்கள் மற்றும் மன மகிழ்வூட்டும் பணிகளுக்கும் ஆற்று நீர் பயன்பட வகைசெய்யும்.

நிலத்தைப் போலவே நீரும் பல போர்களுக்கும், தகராறுகளுக்கும் காரணமாக இருந்ததுண்டு. இன்றைய விஞ்ஞானம், இவ்வகைத் தகராறுகளைத் தேவையற்றதாக்கி விட்டது. சரியான முறையில் நீர் வளங்களை வளர்த்தால் அனைவருக்கும் வேண்டிய தண்ணீர் கிடைக்கும்.

ஆறுகள் இனி நாடுகளைப் பிரிக்க வேண்டியதில்லை; நட்புறவுடன் முன்னேறுவதற்கு ஒரு வழியாக விளங்கமுடியும்.

நீர்வள வளர்ச்சி காண்பதில் புதிய புதிய விஞ்ஞான—தொழில் நுட்ப வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள நாடுகள் நெருங்கிச் சேர்ந்து பாடுபட வேண்டும்; இதுவே அண்டை நாடுகளிடையே நட்புறவும் அமைதியும் ஏற்பட வழிசெய்யும்.

நடக்க இருப்பவை

9--4--68

பெரியகாலாப்பட்டு

தி. மு. க. திறப்பு விழா; மாலை 5 மணிக்கு; தலைவர்: பெ. இராமச்சந்திரன்; திறப்பாளர்: எம். ஏ. சண்முகம்; கொடியேற்றுபவர்: ஈ. குபேர் எம்.எல்.ஏ.; சிறப்புரை: என். வி. நடராசன் எம்.எல்.சி.; அண்ணா படத்திறப்பாளர்: கு. முருகையன்; நாவலர் படத்திறப்பாளர்: சி. பி. திருநாவுக்கரசு; கலைஞர் படத்திறப்பு: சி. பெருமாள்ராஜா எம்.எல்.ஏ.; எம். ஜி. ஆர். படத்திறப்பு: ஏ. புவியரசு; எஸ். எஸ். ஆர். படத்திறப்பு: சி. என். பார்த்தசாரதி; இனிப்பு வழங்குபவர்: வி. சுப்புரத்தினம்.

வந்தவாசி

நகர தி. மு. க. சார்பில், மாலை 6 மணிக்கு சீநாராம நாயுடு தெருவில்; தலைவர்: ஆர். வேணுகோபால்; கொடியேற்றுபவர்: எம். கே. இப்ராகிம்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எஸ். முத்துலிங்கம் எம்.எல்.ஏ., எஸ். கே. ரெசாக், அமுதா ராகவன், கே. எம். ஏ. அப்துல், கே. எம். ஹசன், ஈதீன், டி. கே. துரை.

மதுரை

பொற்செழியன் நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு கோரிப்பாளையம் சம்புரோ புரத்தில்; தலைவர்: கே. கே. இராசாங்கம்; பேசுவோர்: கோவை மு. இராமநாதன், கோவிந்தராசன் எம்.எல்.ஏ., காமராசு, மு. நடராசன்.

10--4--68

குறிஞ்சிப்பாடி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு தில்லை வில்லாளன் எம்.பி. அவர்களுக்குப் பாராட்டு; தலைவர்: கு. த. பழனியப்பன்; பேசுவோர்: எம். எம். பீர் முகம்மது எம்.எல்.ஏ., இரா. சாம்பசிவம், என் இராசாங்கம் எம்.எல்.ஏ., க. நாராயணசாமி, மற்றும் பலர்.

திருச்சி

31-வது வட்ட தி. மு. க. கிளையின் புதிய கட்டிடத் திறப்பு விழா; மாலை 5 மணிக்கு பாலக்கரை எடத்தெருவில்; தலைவர்: எம். எஸ். மணி எம்.எல்.ஏ.; திறப்பாளர்: அமைச்சர் திரு. மாதவன்; பேசுவோர்: அன்பில் தர்மலிங்கம், ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ,, ஜி. பராங்குசம் எம்.எல்.சி., அ. நடராசன், எஸ். ஏ. ஜி. ராபி.

'கட்சி மாறி'களுக்குக் காங்கிரசுக் கட்சி அளித்த ஊக்கப் பரிசு!

பழம்பெரும் காங்கிரசுக்காரரே கண்டிக்கிறார்!

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கருத்துரை

ஆமதாபாத், ஏப். 7—

"கடந்த பொதுத்தேர்தலுக்குப் பின், இதுவரை 213 சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி விட்டுக் கட்சி மாறியிருக்கள்; அவர்கள் செயலுக்குப் பரிசா, அவர்களில் 116 பேருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன"

என்று, முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரசுக்காரரும் தற்போதைய நிதிக் குழுத் தலைவருமான திரு. மகாவீர் தியாகி தெரிவித்தார்.

"ஒரு கட்சி, மற்றொரு கட்சியிலிருந்து விலகி வருபவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்குமுன் ஆறு மாத காலம் தற்காலிக உறுப்பினராகவே அவரை வைத்துக் கொள்ள வேண்டும்"

என்று; சுதந்தரக் கட்சித் தலைவர் திரு. என். ஜி. ரங்கா கருத்தறிவித்தார்; இக்கருத்தை திரு. தியாகி ஏற்றுக் கொண்டதுடன், 'தற்காலிக உறுப்பினர் காலக் கெடுவை ஓராண்டாக உயர்த்த வேண்டும்' என்றும் கூறினார்.

இப்படி, 'கட்சி மாறி'களைப் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு இவர்கள் கருத்தறிவித்தனர்; கட்சி விட்டுக் கட்சி மாறுபவர்களை வன்மையாகக் கண்டித்தனர்.

"கட்சி மாறும் போக்கைத் தடுத்து நிறுத்தும் வகையில் எல்லாக் கட்சிகளிடையேயும் ஓர் உடன்பாடு காணவேண்டும்"

என்று, இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருமே கருத்தறிவித்தனர்.

"இப்படிக் கட்சி மாறும் போக்கிற்குக் காங்கிரசுக் கட்சி தான் முதலில் ஊக்கமளித்தது"

என்று திரு. என். ஜி. ரங்கா குற்றஞ்சாட்டினார்.

"என்னுடைய கட்சி, இத்துறையில, ஒரு நல்லொழுக்க மரபை உருவாக்கத் தவறிவிட்டது"

என்று திரு. தியாகி ஒப்புக்கொண்டார்.

"சுவிட்ஜர்லாந்தில் உள்ளதைப்போல, அனைத்துக்கட்சி அரசு அமைக்கலாம்"

என்று திரு ரங்கா யோசனை தெரிவித்தார்; இதனை, தியாகி ஒப்புக்கொள்ளவில்லை; மாநிலங்களில் ஏற்பட்ட ஐக்கிய முன்னணி ஆட்சிகள் திருப்திகரமாக இயங்கவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்; 'கட்சிகள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கலாம்' என்றார் அவர்.

டெல்லிப் பத்திரிகையாளரான இந்திரஜித் என்பார் கருத்தறிவிக்கையில், 'கட்சி மாறுபவர்களுக்கு பதவி தானாகவே காலியாகிவிடுமாறு செய்யவேண்டும்' என்றார்.

கருத்தரங்குக்குத் தலைமை வகித்த திரு. சாந்திலால் ஷா எம்.பி., திரு. என். ஜி. ரங்காவின் அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்கும் கருத்தை எதிர்த்தார்.

ரூ. 690 கோடி விவசாயக் கடனுதவி

புதுடில்லி, ஏப் 8—

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடப்பு நிதி ஆண்டில் (1968—69), ரூ. 690 கோடி அளவுக்கு விவசாயக் கடனுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இதில் ரூ. 590 கோடி, குறுகிய கால—நடுத்தரக் காலக் கடன்களாக இருக்கும்; எஞ்சியவை, நில அடமான பாங்கிகள் மூலம் அளிக்கப்படும் நீண்ட காலக் கடனுதவிகளாக இருக்கும்.

நரசிங்கபுரத்துக்கு உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் வருகை

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நரசிங்கபுரம் ஊராட்சிமன்றத்தின் மேல் நீர் நிலைத் தொட்டித் திறப்பு விழா, 9—4—68 மாலை 6-மணிக்கு திரு. சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்; அமைச்சர் கே. ஏ. மதியழகன் திறந்துவைப்பார்; மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இலட்சுமிகாந்தன் பாரதி ஐ ஏ.எஸ். சிறப்புரையாற்றுவார்; ஊராட்சிமன்றத் தலைவர் திரு. சு. நடராசன் அமைச்சருக்கு வரவேற்பு மடல் வாசித்தளிப்பார்.

கல்லூரி நிதிக்கு நாடகம்

தாம்பரம்—கௌரிவாக்கம் எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரி நிதிக்காக, 9—4—68 மாலை 6-30 மணிக்கு, மயிலாப்பூர் மியூசிக் அகடாமி அரங்கில்—புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில்—நடிகர் மனோகர் குழுவினரின் 'துரோணர்' என்னும் நாடகம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.